# 02-04-2024 செய்தி

## வேலைவாய்ப்பின்மை பிரச்சினை

- இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வருவதை அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறது சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ஐஎல்ஓ) வெளியிட்டிருக்கும் அறிக்கை.
- டெல்லியில் மையமாகக் கொண்டு இயங்கிவரும் மனித வளர்ச்சிக்கான நிறுவனத்துடன் (The Institute for Human Development) இணைந்து, மார்ச் 26இல் ஐஎல்ஓ வெளியிட்டிருக்கும் இந்த அறிக்கை வேலைவாய்ப்பின்மை பிரச்சனையின் பல்வேறு கோணங்களை அலசுகிறது.
- இளைஞர்களைப் பொறுத்தவரை 2000-2019 ஆண்டுகால இடைவெளியில் வேலைவாய்ப்பு அதிகரித்து வந்திருக்கிறது.
- கற்ற கல்விக்குத் தகுதியற்ற வேலை/ குறைந்த ஊதியம் தரும் வேலை என்கிற அளவிலேனும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று கூறும் இந்த அறிக்கை, கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் வேலைவாய்ப்பு குறைந்ததாகச் சுட்டிக்காட்டுகிறது.
- ஒட்டுமொத்தமாக வேலைவாய்ப்பின்மை என்பது இந்தியாவின் முக்கியப் பிரச்சினையாகவே தொடர்கிறது.

## கந்திலி அருகே விஜயநகர மன்னர்கள் கால நடுகல் கண்டெடுப்பு

- கந்திலி அருகே விஜயநகர மன்னர்கள் கால நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- திருப்பத்தூர் மாவட்ட தொன்மை பாதுகாப்பு மைய ஒருங்கிணைப்பாளர் பிரபு தலைமையில் கள ஆய்வு மேற்கொண்டபோது கந்திலி அருகே தொப்பலக்கவுண்டனூர் என்ற இடத்தில் நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- நடுகல்லானது 3 அடி அகலம், 3 அடி உயரமும் கொண்டதாக உள்ளது. புடைப்பு சிற்பங்களாக நடுகல் காட்சி விவரிக்கப்பட்டுள்ளது.
- தலையில் அம்பு பாய்ந்து மறுபுறம் வெளிவந்த நிலையில் ஒரு குதிரை வீரரும், மார்பில் வேல் பாயந்து மறுபுறம் வந்த நிலையில் ஒரு வில் வீரரும் போரிடும் நிகழ்வை நடுகல் நமக்கு எடுத்துச் சொல்கிறது.
- இந்த நடுகல் இப்பகுதியில் நடைபெற்ற போரில் உயிர் துறந்த இரண்டு வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லாகும்.
- இந்த நடுகல் விஜயநகர மன்னர்கள் ஆட்சிக்காலத்தின் தொடக்க காலத்தைச் சேர்ந்ததாக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அதாவது கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றார்.

## சூப்பர் எல் நினோ இந்தியாவை பாதிக்குமா?

- ‘எல் நினோ’ என்பது பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பில் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்பை குறிக்கும். இது உலகின் பல்வேறு பகுதிகளில் கால நிலையில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தும்.
- பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை பொதுவாக 26 டிகிரி முதல் 27 டிகிரி செல்சியஸ் ஆக இருக்கும். அதன் அளவு 32 முதல் 34 டிகிரி செல்சியஸ் வரை உயர்ந்தால் ‘சூப்பர் எல்நினோ’ என்று அழைக்கப்படும்.
- இந்த நிலையில் அமெரிக்காவின் தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் வெளியிட்டுள்ள ஒரு அறிவிப்பில், மார்ச் மற்றும் மே மாதங்களுக்கு இடையே சூப்பர் எல் நினோ ஏற்படலாம் என்று தெரிவித்துள்ளது.
- பொதுவாக எல் நினோ தாக்கம் ஏற்படும்போது இந்தியாவில் வறட்சி ஏற்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். கடந்த 2002 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் எல் நினோ தாக்கத்தால் இந்தியாவில் வறட்சி ஏற்பட்டுள்ளது.
- தற்போது இந்தியாவில் கோடை காலம் தொடங்கி உள்ளதால், சூப்பர் எல் நினோவின் தாக்கமும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

## 30 இடங்களுக்கு புதிய பெயர்: சீனாவுக்கு இந்தியா கண்டனம்

- அருணாச்சல பிரதேசத்தின் மீதான தனது உரிமையை நிலைநாட்டும் முயற்சியாக, இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்தில் உள்ள எல்லை கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் (எல்ஏசி) உள்ள 30 இடங்களின் பெயர்களை சீனா மாற்றி உள்ளது.
- சீனாவால் மறுபெயரிடப்பட்ட இடங்களின் பட்டியலில் 11 குடியிருப்பு பகுதிகள், 12 மலைகள், 4 ஆறுகள், ஒரு ஏரி, ஒரு மலைப்பாதை மற்றும் ஒரு துண்டு நிலம் ஆகியவை அடங்கும்.
- புதிய பெயரில் சீன எழுத்துகள், திபெத்தியன், பின்யின், மாண்டரின் சீனத்தின் ரோமானிய எழுத்துகள் இடம்பெற்றுள்ளன.
- அதுமட்டுமின்றி விரிவான அட்சரேகை, தீர்க்கரேகை அடங்கிய உயர் - தெளிவுத்திறன் கொண்ட வரைபடத்தையும் வெளியிட்டுள்ளதாக சீன சிவில் விவகார அமைச்சகத்தை மேற்கோள்காட்டி ஹாங்காங் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
- சீனா 2017-ல் அருணாச்சல பிரதேசத்தில் உள்ள 6 இடங்களின் பெயர்களை தன்னிச்சையாக மாற்றியது.
- அதையடுத்து, 2021-ல் 15 இடங்களின் பெயர்களையும் 2023-ல் 11 இடங்களின் பெயர்களையும் மாற்றி பட்டியலை வெளியிட்டது.
- இந்த நிலையில், 4-வது முறையாக அருணாச்சல பிரதேசத்தின் 30 இடங்களின் பெயர்களை சீனா தற்போது தன்னிச்சையாக மாற்றியமைத்துள்ளது.
- அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. பெயரை மாற்றுவதால் எதார்த்த நிலையை ஒருபோதும் மாற்ற முடியாது என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.